www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
මුழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2023 சம்பியன் அகடமி Champion Academy 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2023

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2023

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். மொத்தப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

Champion Academy

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "





Contact


76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

www.lkedu.lk

01. முதலில் தரப்பட்டுள்ள தொழிலாளியின் கையில் காணப்பட வேண்டிய சரியான உபகரணத்தைத் தெரிவு செய்க.





(1)




(2)



(3)

02. கீழே தரப்பட்டுள்ள உருவில் 1, 2 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்குப் பொருத்தமான உருக்கள் முறையே அமைந்த விடையைத் தெரிவு செய்க.




(1)




(2)




(3)




03.




அருகே தரப்பட்டுள்ள எட்டு அட்டைத் தாள்களை ஒழுங்குபடுத்தும் போது பெறப்படும் சரியான உருவினைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.



(1)



(2)



(3)

04. உலகம் அமைதி நிலையில் இருக்க மனிதர்கள் ..... இருக்க வேண்டும். இருக்கும். ஒருவருக்கொருவர் சண்டை போட்டு கொள்வதை தவிர்த்து விடுதல் நல்லது. ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து கொண்டு ..... மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் தான் வாழும் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும்.

மேலே தரப்பட்டுள்ள பந்தியில் இடைவெளியில் வர வேண்டிய சொற்கள் முறையே,

(1) ஒற்றுமையாக, விட்டுக்கொடுக்கும் (2) அமைதியாக, சுயநல (3) மகிழ்ச்சியாக, தாழ்ந்த

Champion Academy


www.lkedu.lk




05. தரப்பட்டுள்ள நான்கு சொற்களுக்கு முன்னால் பொதுவாக ஒரு சொல் இணையும் போது கருத்துள்ள நான்கு சொற்களைப் பெற முடியும். அவ்வாறு முன்னால் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

..... → குறி, கொலை, புகழ்ச்சி, சமயம்

(1) சற்
(2) தற்
(3) நற்

06. உருக்களின் வரிசையை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




(1) 
(2) 
(3) 

07. ஞாயிற்றுக்கிழமைக்கு நான்கு நாட்களுக்கு முன்னைய நாளானது நாளை மறுதினமாகும். அவ்வாறெனின், இன்று என்ன நாளாகும்?

(1) திங்கள் (2) புதன் (3) ஞாயிறு

08. பின்வரும் சதுரக் கட்டங்களினுள் இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

50	51	49	52	48
46	47	45	48	44
49	50		51	
47		46		45
48		47	50	46



(1) (2) (3)

09. **1, 2, 3, 4** என்ற எண்களிலிருந்து ஒரே நேரத்தில் இரண்டு எண்களை வெளியே எடுப்பதன் மூலம் ஈரிலக்க எண்கள் சில உருவாக்கப்படுகின்றன. அவ்வாறாக உருவாக்கப்படக்கூடிய ஆகக்கூடியளவான ஈரிலக்க எண்கள் எத்தனை?

(1) 12 (2) 10 (3) 16

10. குறித்த நிகழ்வொன்றில் இரண்டு வடைகளுக்கு ஒரு வாழைப்பழம் வீதம் பரிமாறப்படுகின்றது. வடையும் வாழைப்பழமுமாக மொத்தம் 300 பரிமாறப்பட்டிருந்தால், அந்த நிகழ்வில் பரிமாறப்பட்ட வடைகள் எத்தனை?

(1) 100 (2) 200 (3) 250


Champion Academy


www.lkedu.lk


11. ஒன்று தொடக்கம் ஆறு வரை இலக்கமிடப்பட்ட சிறிய புத்தகமொன்றில் இருந்து ஒரு தாள் கிழிக்கப்பட்டது. கிழிக்கப்பட்ட தாள் தவிர்ந்த ஏனைய பக்க இலக்கங்களின் கூட்டுத்தொகை 18 ஆகும். எனவே, கிழித்தெடுக்கப்பட்டது புத்தகத்தின் எத்தனையாவது தாளாகும்?


(1) 1ம் தாள் (2) 2ம் தாள் (3) 3ம் தாள்

12. முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்தத் தேவையான சதுரமுகித் தொகுதியைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 


13. கீழே தரப்பட்டுள்ள அட்டைகளில் ஒவ்வொரு தமிழ் எழுத்துக்களும் அவ்வட்டையின் மேல் மூலையில் அவ் எழுத்துக்களுக்கு வழங்கப்படும் புள்ளிகள் இலக்கத்தினாலும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

வெ 4	ன் 1	து 1	ம் 4	ப 3	இ 1	ன் 4	ப 2

இங்குள்ள அட்டைகளை **ஆகக்கூடியளவு** பயன்படுத்தி உருவாக்கக் கூடிய சொல்லினால் பெறப்படும் புள்ளிகள் எத்தனை?

(1) 12 புள்ளிகள் (2) 16 புள்ளிகள் (3) 17 புள்ளிகள்

14. **X Y Z** எனும் மூன்று மாணவர்கள் சமபக்க முக்கோணி வடிவிலமைந்த தோட்டமொன்றின் மூலைகளில் நிற்கின்றனர். இவர்கள் மூவரும் தமது நிலைகளில் இருந்து அம்புக்குறிகள் காட்டும் திசைகளின் வழியாக **15m** தூரம் நடந்து சென்று நின்றார்களாயின், பின்வரும் கூற்றுக்களில் **மிகச் சரியான** கூற்றினைத் தெரிவு செய்க.




(1) **X** எனும் மாணவன் **Z** மாணவனுக்கு கிழக்குத் திசையில் உள்ளான்.

(2) **Z** எனும் மாணவன் **Y** மாணவனுக்கு மேற்குத் திசையில் உள்ளான்.

(3) **Y** எனும் மாணவன் **Z** மாணவனுக்கு மேற்குத் திசையில் உள்ளான்.

15. பெரிய நீர்க்குழாயினூடாக வேகமாக நீரானது பாயும் முறையை உருவானது காட்டுகின்றது. இவ்வுருவின் அடிப்படையில் நீரானது மிக வேகமாகப் பாய்வது எந்த ஆங்கில எழுத்து எழுதப்பட்டுள்ள இடத்திலாகும்?



(1) **B**

(2) **C**


(3) **D**

Champion Academy

www.lkedu.lk


16. சமமான இடைவெளிகளுடன் கூடிய 21 தூண்களைக் கொண்டு அமைந்துள்ள தூண் வரிசையொன்றில், ஆரம்பத் தூணிற்கும் இறுதித் தூணிற்கும் இடையிலான தூரம் **100m** ஆகும். அவ்வாறெனின், அந்த வரிசையில் 17ஆவது தூணிற்கும் 19ஆவது தூணிற்கும் இடையிலான தூரம் எத்தனை மீற்றர்களாகும்?

(1) 15 (2) 10 (3) 8


17. 

இக் கோலத்தில் நீளத்தில் ஒன்பது ஓடுகளும், அகலத்தில் நான்கு ஓடுகளும் ஓரத்தில் சுற்றி வர 22 ஓடுகளும் உள்ளன. இங்குள்ள ஓடுகள் அனைத்தையும் பயன்படுத்தி ஒவ்வொரு பக்கத்திலும் 6 ஓடுகள் வருமாறு ஒரு சதுர வடிவில் இவ்வோடுகளை அடுக்கும் போது , சுற்றிவர ஓரத்தில் காணப்படும் ஓடுகள் எத்தனை?


(1) 24 (2) 36 (3) 20

18. 

அருகே தரப்பட்டுள்ள உருவினைக் கொண்டு 1943 என்ற எண்ணை எழுதியுள்ள முறை கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ளது.



மேலே எண்ணிற்கான குறியீடு எழுதப்பட்டுள்ள முறைக்கேற்ப கீழ்வரும் குறியீடு குறித்து நிற்கும் சரியான எண்குறி யாது?



(1) 62587

(2) 60183


(3) 60587

19. நித்தியிடமும் ஆகாஷிடமும் ரூபாய் **50.00** உள்ளது. நித்தியிடமும் சீதாவிடமும் ரூபாய் **60.00** உள்ளது. ஆகாஷிடமும் சீதாவிடமும் ரூபாய் **70.00** உள்ளது. நித்தி, ஆகாஷ், சீதா ஆகிய மூவரிடமும் காணப்படும் பணத்தொகையானது சமமாவதற்கு,

(1) ஆகாஷிடமிருந்து ரூபாய் 10.00 இனை நித்திக்கு வழங்க வேண்டும்.

(2) சீதாவிடமிருந்து ரூபாய் 10.00 இனை ஆகாஷிற்கு வழங்க வேண்டும்.

(3) சீதாவிடமிருந்து ரூபாய் 10.00 இனை நித்திக்கு வழங்க வேண்டும்.

20. 

அருகே தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

(1) 20
(2) 22
(3) 18

Champion Academy

www.lkedu.lk

21. **A, B, C** என்ற மூன்று பிள்ளைகளிடம் கானப்பட்ட உண்டியல்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



ரூபாய் 2.00 நாணயங்கள் மட்டும்



ரூபாய் 5.00 நாணயங்கள் மட்டும்



ரூபாய் 10.00 நாணயங்கள் மட்டும்

இவர்கள் மூவரும் மேற்குறித்தவாறு குறித்த நாணயங்களால் மட்டும் உண்டியலை நிரப்பி திறந்து பார்த்த போது மூவரிடமும் சமமான தொகை காணப்பட்டது. அந்தத் தொகை ரூபாய் 100.00 ஐ விட அதிகமாகுமெனின், இம் மூன்று உண்டியல்களிலும் காணப்பட்ட ஆகக் குறைந்தளவான நாணயங்களின் எண்ணிக்கை யாது?

(1) 86 (2) 84 (3) 88

22. பொதிகளைப் பரிமாற்றம் செய்யும் நிறுவனமொன்று பொதிகளின் நிறையில் முதல் **500g** இற்கு ரூபாய் 50.00 உம், மேலதிகமான ஒவ்வொரு **500g** இற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் ரூபாய் 30.00 கட்டணமாக அறவிடப்படும். இதன்படி **3kg 524g** நிறையுள்ள பொதிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?

(1) ரூபாய் 200.00 (2) ரூபாய் 230.00 (3) ரூபாய் 260.00

23. "எனது பிறந்தநாளின் போது எனக்கு எத்தனை வயதோ அந்த எண்ணிக்கையில் மெழுகுதிரிகள் ஏற்றப்படும். அவ்வாறு ஏற்றப்படும் மெழுகுதிரிகளை நான் ஒரு வயதிலிருந்து சேகரித்து வருகின்றேன்." என்று சுபா கூறினாள். சுபாவிடம் தற்போதுள்ள மெழுகுதிரிகளின் மொத்த எண்ணிக்கை 55 எனின், சுபா இறுதியாக எத்தனையாவது பிறந்தநாளைக் கொண்டாடியிருப்பாள்?

(1) 9ஆவது (2) 10ஆவது (3) 11ஆவது

24. மணித்தியாலத்திற்கு 8 நிமிடங்கள் முந்தி ஓடும் கடிகாரமானது பிற்பகல் 1.00 மணிக்கு சரியான நேரத்தைக் காட்டியது. ஆகாஷ் சிறிது நேரத்தின் பின்னர் அக்கடிகாரத்தை அவதானித்த போது அக்கடிகாரம் பிற்பகல் 5.32 மணியைக் காட்டியது. எனின், பிற்பகல் 1.00 மணியிலிருந்து எத்தனை மணித்தியாலத்தின் பின்னர் ஆகாஷ் அக்கடிகாரத்தை அவதானித்திருப்பான்?

(1) 5 (2) 4 (3) 6

25. ஆங்கில அகராதியை அடிப்படையாகக் கொண்டு **TRIANGLE** என்ற சொல்லை இரகசிய மொழியின் மூலம் **SQHZMFKD** என்று எழுதப்பட்டுள்ளது எனின், **DWZLOKD** என்றவாறு இரகசிய மொழியில் எழுதப்பட்டுள்ளது பின்வரும் சொற்களுள் எந்தச் சொல்லாகும்?

(1) **EMOTION** (2) **ENVELOP** (3) **EXAMPLE**


26. ஏதாவது இரண்டு முழு எண்களுக்கு, குறியீடு $\ominus$ ஆனது முதலாவது இலக்கத்திலிருந்து இரண்டாவது இலக்கத்தைக் கழிக்கும் செயற்பாட்டைக் குறிக்கின்றது. அத்துடன் குறியீடு $\otimes$ ஆனது இரண்டு இலக்கங்களின் பெருக்கத்தின் இரு மடங்கினைக் குறிக்கிறது. எனின் $\boxed{28 \ominus 19 \otimes 5}$ எனும் இச்சமன்பாட்டின் பெறுமானம் யாது?

(1) 45 (2) 90 (3) 17

Champion Academy

www.lkedu.lk

27. உருவில் காணப்படுகின்ற காட்டியானது, ஒவ்வொரு நிமிடத்திற்கும் கடிகார முட்கள் சுழலும் திசையில் மூன்று இலக்கங்கள் நகரும். அது இலக்கம் 1 இலிருந்து ஆரம்பிக்குமெனின், ஐந்து நிமிடங்களின் பின்னர் காட்டியானது எந்த இலக்கத்தைக் காட்டி நிற்கும்?




(1) 1 (2) 2 (3) 3

28. புதிய ஆண்டுக்கான நாட்குறிப்பேடு (Diary) ஒன்றில் வருடத்தில் உள்ள எல்லா நாட்களிலும் நடைபெறும் விடயங்களை குறித்து வைக்க ஒரு பக்கத்தில் இரண்டு நாட்களுக்கான இடைவெளிகள் வீதம் 365 நாட்களுக்குமாக இடைவெளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனின், இவ்வாண்டுக்கான நாட்குறிப்பேடு **ஆகக் குறைந்தது** எத்தனை தாள்களைக் கொண்டிருக்கும்?

(1) 183 (2) 91 (3) 92

29. பின்வரும் உருவை நன்கு அவதானித்து சீதா, காசிம், தேவி எனும் மாணவர்கள் கூறிய கூற்றுக்களை அவதானிக்குக.



சீதா : எல்லா பட்டதாரிகளும் மாணவர்களாவர்.

காசிம் : மாணவர்களில் சிலர் விளையாட்டு வீரர்களாவர்.

தேவி : சில மாணவர்கள் பட்டதாரிகளாவர்.

மேற்குறித்த கூற்றுக்களுள் **உண்மையான கூற்று / கூற்றுகள்** யார் கூறியதாகும்?

(1) சீதாவும் தேவியும் (2) சீதாவும் காசிமும் (3) இவர்கள் மூவரும்

30. புதுவருட களியாட்ட விழாவொன்றில் இராட்டினமொன்று பிற்பகல் 5.00 மணி முதல் மறுநாள் முற்பகல் 1.00 மணி வரை செயற்படுகின்றது. இக் களியாட்டம் தொடர்பான பின்வரும் நடைமுறைகளை அவதானிக்குக.

- இராட்டினத்தில் ஒவ்வொரு சவாரிக்கும் 6 நிமிடங்கள் எடுக்கும்.
- ஒரு சவாரிக்கிடையே ஆட்களை இறக்கவும் மீண்டும் புதிய ஆட்களை ஏற்றவும் 12 நிமிடங்கள் எடுக்கும்.
- ஒவ்வொரு சவாரிக்கும் இடையே இடைவேளையாக 2 நிமிடங்கள் எடுத்துக் கொள்வர்

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளின் படி ஒரு நாளில் **உயர்ந்தபட்சமாக** எத்தனை சவாரிகள் இடம்பெறும்?

(1) 24 சவாரிகள் (2) 40 சவாரிகள் (3) 12 சவாரிகள்


31. கடதாசிகளுக்கான தட்டுப்பாடு நிலவிய காலத்தில் நாட்காட்டிகளை 12 தாள்களில் தனித்தனியாக அச்சிடுவதைத் தவிர்த்து 6 தாள்களில் இரு பக்கங்களிலும் அச்சிடுவதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டது. ஜனவரி முதல் ஜூன் வரை அச்சிட்டு அடுத்த மாதத்தை ஜூன் மாதத்தின் பின்புறத்தில் அச்சிட ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறாக அச்சிடும் போது எத்தனை தாள்களில் இரு புறங்களிலும் 31 நாட்களைக் கொண்ட மாதங்கள் காணப்படும்?

(1) 1 (2) 2 (3) 3

Champion Academy

www.lkedu.lk

32. அருகே தரப்பட்டுள்ள தாயம் போடுதல் அட்டையில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள இடத்திலிருந்து ஆரம்பித்து அம்புக்குறிகள் காட்டும் திசைகளினூடாக காய்களை நகர்த்தி இறுதியில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள பகுதியை அடைந்ததும் வெற்றி எனக் கருதப்படும். இவ்வாறாக ஒருவர் வெற்றியடைவதற்கு எத்தனை தடவைகள் காய்களை நகர்த்த வேண்டும்?




(1) 56

(2) 57

(3) 58

33. அருகே தரப்பட்டுள்ள எண்சட்டத்தில் காணப்படும் மணிகளில் பத்தாயிரங்களில் காணப்படும் மணிகளை மாற்றாது ஏனைய மணிகளைக் கொண்டு ஐந்திலக்க மிகப் பெரிய எண்ணை அமைக்க ஆகக்கூடியது எத்தனை மணிகளை இடம் மாற்றுதல் வேண்டும்?




(1) 9 மணிகள்

(2) 6 மணிகள்

(3) 4 மணிகள்

34. ஒரு மேசையின் மீது ஒரேயளவான 8 சதுரமுகிகள் ஒன்றுடனொன்று தொடுகையுற்றவாறு அருகே உருவில் உள்ளது போன்று வைக்கப்பட்டுள்ளது. இம்மேசையைச் சுற்றி முழுமையாக ஒரு தடவை சுற்றி வரும் போது இச்சதுரமுகிகளின் எத்தனை சதுர வடிவ முகங்களைக் காண முடியும்?



(1) 12 முகங்கள் (2) 16 முகங்கள் (3) 20 முகங்கள்

35. பின்வரும் எண்கோலங்களை அவதானிக்குக.

P - 7 , 12 , 17 , 22 , 27

Q - 8 , 14 , 20 , 26 , 32

R - 80 , 85 , 90 , 95 , 100

மேலேயுள்ள எண்கோலங்கள் தொடர்பான **மிகச் சரியான** கூற்றினைத் தெரிவு செய்க.

(1) P எனும் எண்கோலமானது, ஒவ்வொரு எண்ணின் இரு மடங்கிலிருந்து ஒன்றைக் கழித்து வருமாறு அமைந்துள்ளது.


(2) R மற்றும் P எனும் எண் கோலங்கள், ஒவ்வொரு எண்ணுடனும் 10 ஐக் கூட்டி பின்னர் 5 ஐக் கழித்து வருமாறு அமைந்துள்ளது.

(3) Q எனும் எண்கோலமானது, ஒவ்வொரு எண்ணுடனும் 3 ஐக் கூட்டி பின்னர் 4 ஐக் கழித்து வருமாறு அமைந்துள்ளது.

Champion Academy


www.lkedu.lk

36. **A, B** எனும் கோள்கள் இரண்டும் சூரியனை மையமாகக் கொண்டு வலஞ்சுழியாக சுற்றி வருகின்றன. **A** கோளானது சூரியனை ஒரு தடவை சுற்றி வர 2 வருடங்கள் தேவை. **B** கோளானது சூரியனை ஒரு தடவை சுற்றி வர ஒரு வருடம் தேவை. கோள்கள் **A** மற்றும் **B** ஆகியனவும் சூரியனும் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளன. இவை மீண்டும் ஒரே நேர்கோட்டில் அமைவதற்கு தேவையான காலம் எவ்வளவு?




(1) ஒரு வருடம் (2) ஒரு வருடமும் ஆறு மாதங்களும் (3) ஆறு மாதங்கள்

37. அருகே தரப்பட்டுள்ள அமைப்பில் இலக்கம் 1 எனக் குறிக்கப்பட்டுள்ள தொட்டியினுள் நீரைத் திறந்து விடும் போது முதன் முதலாக முழுவதுமாக நிறைவடையும் தொட்டியின் இலக்கம் யாது?




(1) 4
(2) 5
(3) 3

38. இரு எண்களுக்கு இடையில் வரையப்பட்டுள்ள அம்புக்குறியானது, **சிறிய எண் ⟶ பெரிய எண்** எனும் தொடர்பைக் காட்டுகின்றது. அருகிலுள்ள வட்டத்தினுள் உள்ள எல்லா எண்களுக்குமிடையில் அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள தொடர்பைக் காட்ட மேலும் எத்தனை அம்புக்குறிகளை இதுபோன்று வரைய வேண்டும்?



(1) 4 (2) 5 (3) 6


39. அருகே தரப்பட்டுள்ள உருவானது பல சிறிய சதுரமுகிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சதுரமுகித் தொகுதியை இதன் ஆறு பக்கங்களில் இருந்தும் பார்க்கும் போது தோன்றும் மொத்த சிறிய சதுர முகங்களின் எண்ணிக்கை யாது?




(1) 36 (2) 46 (3) 48


40. தரப்பட்டுள்ள பாதை வரிப்படத்தை நன்கு அவதானிக்குக.

A எனும் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த சுரேஷ் **F** எனும் இடத்தில் பயணத்தை முடிக்கும் அதேவேளை, **C** எனும் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த சீதா **F** ஐக் கடந்து **A** எனும் இடம் வரை பயணித்தாளாயின், இவர்கள் இருவரும் தமது பயணத்தின் போது முதலில் அவதானித்து இருக்கக்கூடிய வீதிக்குறியீடுகள் முறையே யாவை?



(1) 

(2) 

(3) 

Champion Academy

www.lkedu.lk

ියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2023 சம்பியன் அகடமி Champion Academy 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2023

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2023

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களுக்கு உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்மும் குறியிட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	V/II/T
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். மொத்தப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2ஐப் பார்க்க

Champion Academy

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

மழை பொழிவதற்கு ஆதாரமாக விளங்கும் காடுகளை, இயற்கை அழகைப் பேணிக்காக்கும் காடுகளை, மக்கள் தம் அறியாமையாலும் பொருளாசையாலும் அழிக்கின்றனர். அங்கு இயல்பாக வாழும் விலங்குகளையும் பிற உயிரினங்களையும் கொல்கின்றனர். அவற்றால் இயற்கை அழகு மற்றும் மழைவளம் என்பன குறைவடைந்துள்ளன. எனவே,காடுகளைக் காக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவரையும் சார்ந்தது. காடுகளால் நாம் அடையும் பயன்கள் அளவற்றவை. அடுப்பெரிக்கும் விறகு முதல் அழகூட்டும் மரத்தளபாடங்கள் வரை அனைத்தும் காட்டிலுள்ள மரங்களினால் மூலமாகவே கிடைக்கின்றன. நாட்டின் பொருளாதார வாழ்வுக்கு அவசியமான சந்தனம், மூங்கில், தேக்கு போன்ற மரங்களையும், செயற்கைத் துணிகள், கடதாசிகள் முதலியவற்றை செய்வதற்கு உதவும் மரங்களையும் காடுகளே தருகின்றன! இவ்வாறு எமக்குப் பயன்படும் காடுகளைக் காப்பது எமது கடமையாகும்.

- **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்க.**

(i) இயற்கை அழகை பேணிப் பாதுகாப்பவை எவை?

: .....

(ii) காடுகளை அழிக்கும் போது எவ்வளங்கள் குறைவடைந்துள்ளதாக பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது? : .....

(iii) **'அடுப்பெரிக்கும்'** எனும் சொல்லைப் பிரித்தெழுதுக. ..... + ...

(iv) பந்தியில் வந்துள்ள எதிர்க்கருத்தினைத் தரும் சொற்சோடியைத் தெரிவு செய்து எழுதுக.

: ..... - .....

(v) மக்கள் எக்காரணங்களினால் காடுகளை அழிப்பதாக பந்தியில் கூறப்பட்டுள்ளது?

:.....

(vi) பந்தியில் வந்துள்ள இடப்பெயர்ச் சொற்களை இணங்கண்டு எழுதுக.

: .....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை என்பவற்றின் தொடர்பு **சரியாயின்** '✓' எனவும் **பிழையாயின்** '✗' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளது. (.....)

(ii) தேனீக்கள் ஒவ்வொரு பூவிலும் தேனை உறிஞ்சிக் குடித்தது. (.....)

(iii) காற்று வேகமாக வீசியதால் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசின. (.....)

(iv) நாம் அனைவரும் பேருந்தில் கதிர்காமத்திற்குப் போனோம். (.....)

(v) அப்பா காலையில் விழித்தெழுவார்கள். (.....)

3. ஆ.ற்றிணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

கதிரை பறந்தது எடுத்தான் அவள் பந்துகள்

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

கழிவுநீர் / நுளம்புகள் / தேங்கி / இடங்களுள் / ஒன்றாகும் / பெருகும் / குளிர்சாதனப் பெட்டியும்

.....

.....

5. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

நற்புகழ் மங்குவதில்லை : .....

[பக். 3 ஐப் பார்க்க

Champion Academy

www.lkedu.lk

6. (i) பின்வரும் கருத்தினை நன்கு வெளிப்படுத்தும் மரபுத்தொடரினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

மனமின்றிச் செய்தல் - (கை கழுவுதல் / எடுத்தெறிதல் / கடன் கழித்தல்)

(ii) பின்வரும் சுருக்கக் குறியீட்டிற்கான விளக்கத்தினைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

வீ. அ. அ. ச : .....

7. 'தொன்மை' என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. : .....

8. பின்வரும் வாக்கியத்தினை ஒன்றல்பால், நிகழ்கால வாக்கியமாக மாற்றி புள்ளிக்கோட்டில் எழுதுக.

பசுக்கள் புற்றரையை நோக்கி உணவிற்காக விரைந்து சென்றன.

: .....

9. கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு தரப்பட்டுள்ள பந்தியைப் பூரணப்படுத்துக.

வியப்புக்குறி	**முற்றுப்புள்ளி**	**மேற்கோட்குறி**	**காற்புள்ளி**

வாக்கியங்களை எழுதும் போது நிறுத்தற்குறிகளின் தேவை மிக அதிகமாகவே உள்ளது. அந்த வகையில் வாக்கிய முடிவைக் காட்டுவதற்காக (i)..... இடப்படுவதுடன், வியப்பு, மகிழ்ச்சி, அதிர்ச்சி, இரக்கம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் முடிவில் (ii)..... உம், சொற்களைத் தனித்தனிச் சொற்களாகவோ அடுக்காகவோ பிரிக்கும் போது (iii)..... உம் இடப்படுகின்றது. மேலும் ஒருவர் கூறிய சொற்களை அவர் கூறியவாறே எடுத்துக் கூறும் போது பனபடுத்தும் நிறுத்தற் குறியீடாக (iv)..... காணப்படுகின்றது.


10. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்ட கட்டங்களுக்குள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக.

(i)



T								

(ii)



R						

11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) wearing / is / Kamala / black / a / skirt : .....

(ii) ambition / What / your / is / ? : .....

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்சொல்லை** எழுதுக.

(i) Country : ..... (ii) Province : .....

13. 'மாலு (மாළු)' என்ற சொல்லிற்குரிய **தமிழ்ச்சொல்லை** எழுதுக.

: .....

Champion Academy

www.lkedu.lk

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

வெளியே போகலாமா? : .....

15. ஒன்றினிடத்து இலக்கம் 6, பத்தினிடத்து இலக்கம் 0, நூறினிடத்து இலக்கம் 4, ஆயிரத்தினிடத்து இலக்கம் 2, பத்தாயிரத்தினிடத்து இலக்கம் 8 ஆகவுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக.

: .....

16. பின்வரும் அட்டவனையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

எண்	இலக்கம்	இலக்கம் அமைந்துள்ள இடம்	இடப்பெறுமானம்	இலக்கத்தினால் வகைகுறிக்கப்படும் பெறுமானம்
86572	.....	ஆயிரத்தினிடம்	.....	.....

17. **'நான்கு தரம் மூன்று'** எனும் வாய்ப்பாட்டின் விடையினை உரோம எண்ணில் எழுதுக.

: .....

18. 85 இல் ஆரம்பித்து 9 ஆல் குறைவடைந்து செல்லும் எண்கோலத்தின் நான்கு உறுப்புக்களைத் தொடராகத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.

85 , ... , ... , ... , ...

19. பிற்பகல் 4 மணி 56 நிமிடத்திற்கு பெய்யத் தொடங்கிய மழையானது 3 மணித்தியாலங்கள் 15 நிமிடங்களின் பின்னர் ஓய்வடைந்தது. மழை ஓய்வடைந்த நேரமானது இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் (நியம) விதத்தைப் பின்வரும் அடைப்பினுள் எழுதுக.

..... : .....


20. பையொன்றிற்கு 4 பொத்தான்கள் வீதம் பொருத்தப்பட்டுள்ளன. அவ்வாறான 56 பைகளில் பொருத்துவதற்கு எத்தனை பொத்தான்கள் தேவை ?


: .....

21. 756 அரிசி மூடைகள் 9 மத்திய நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. ஒரு மத்திய நிலையத்துக்கு கிடைக்கும் அரிசி மூடைகள் எத்தனை ?

: .....


22. பின்வரும் கோணங்கள் செங்கோணமா? , செங்கோணத்திலும் சிறிய கோணமா? , செங்கோணத்திலும் பெரிய கோணமா? எனத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


(i) 

(ii) 

....

23. ஒரு பக்க நீளம் **1cm** ஐக் கொண்டுள்ள சதுரக்கட்ட வலையில் அருகில் தரப்பட்டுள்ள கனவுருவின் முன்பக்கத் தோற்றத்தை வரைந்து காட்டுக.





[பக். 5 ஐப் பார்க்க

Champion Academy

www.lkedu.lk

24. திருகோணமலையில் இருந்து புத்தளத்திற்கான தூரம் **120km 350m** ஆகும். புத்தளத்தில் இருந்து கொழும்பிற்கான தூரம் **80km 500m** ஆகும். அதன்படி, திருகோணமலையில் இருந்து புத்தளம் ஊடாக கொழும்பிற்கான தூரம் யாது ?

: ..... km ..... m

25. பூசணிக்காய் ஒன்றின் நிறை 2kg 50g ஆகும். இன்னுமொரு பூசணிக்காயின் நிறை 3kg 650g ஆகும். இரண்டினதும் மொத்த நிறைகளுக்கு இடையிலான வித்தியாசம் யாது?

: ..... kg ..... g

26. கொள்கலன் ஒன்றில் 7065 ml தேங்காய் எண்ணெய் உள்ளது. அதில் இருந்த எண்ணெய்யின் அளவை லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் எழுதுக.

: ..... *ℓ* ..... *ml*

27. ஒரு பிள்ளை பாடசாலை மைதானத்தில் புள்ளி A இலிருந்து ஆரம்பித்து 30m கிழக்கு நோக்கியும், அவ்விடத்திலிருந்து 30m தெற்கு நோக்கியும், அவ்விடத்திலிருந்து 60m மேற்கு நோக்கியும் சென்று புள்ளி B ஐ அடைந்தது. புள்ளி B இலிருந்து A எத்திசையில் அமைந்துள்ளது?

: .....

28. திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு, கல்முனை வழியாக அக்கரைப்பற்று வரைக்கும் உள்ள தூரம் பின்வரும் அட்டவணையில் km இல் தரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து அக்கரைப்பற்று வரைக்கும் உள்ள தூரம் எத்தனை கிலோமீற்றர் ஆகும் ?

: ..... km

			அக்கரைப்பற்று
		கல்முனை	**73**
	மட்டக்களப்பு	**59**	**132**
திருகோணமலை	**45**	**104**	**177**

29. விற்பனை நிலையமொன்றில் நான்கு மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட கடிகாரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மாதங்கள்	கடிகாரங்களின் எண்ணிக்கை
ஜனவரி	🕒🕒🕒🕒🕒
பெப்ரவரி	🕒🕒🕒🕒
மார்ச்	🕒🕒🕒
ஏப்ரல்	🕒🕒🕒🕒🕒🕒

அட்டவணையில் உள்ள 🕒 எனும் குறியீடானது 4 கடிகாரங்களைக் குறிக்கின்றது.

(i) ஏப்ரல் மாதத்தை விட ஜனவரி மாதம் எத்தனை கடிகாரங்கள் குறைவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது?

.....

(ii) நான்கு மாதங்களிலும் விற்பனை செய்யப்பட்ட மொத்தக் கடிகாரங்களின் எண்ணிக்கை யாது?

: .....

- **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. இரவு நேரத்தில் இலைகளைச் சுருட்டிக் கொள்ளும் தாவரம்,

(1)நாவல் (2) அகத்தி (3) மா

31. தமது தொழிலில் சீருடை அணியாத தொழிலாளர்,

(1) பொலிஸ் (2) தாதி (3)ஆசிரியர்

32. ஆழமான கிணறுகளிலிருந்து நீரை மேலே எடுப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற வேலையை இலகுவாக்கும் பொறி எது?

(1) கப்பி (2) சாய்தளம் (3) பற்சில்லு

[பக். 6 ஐப் பார்க்க

Champion Academy

www.lkedu.lk

33. ஆபத்து ஏற்படுவதற்கு அதிக சாத்தியமுள்ள சந்தர்ப்பம் ஒன்று,

(1) வீதி சமிக்ஞையில் சிவப்பு மனிதன் காட்சியளிக்கும் போது பாதசாரிக் கடவையினூடாக வாகனங்கள் செல்லுதல்.

(2) மின்னல் ஏற்படும் போது வீட்டிலுள்ள பலகைக் கட்டிலின் மீது நித்திரை கொள்ளல்.

(3) விளையாட்டு விழா முடிவடைந்தவுடன் பட்டாசு கொளுத்துதல்.

34. பேராதனை தாவரவியற் பூங்கா அமைந்துள்ள மாகாணம்,

(1) மத்திய மாகாணம் (2) ஊவா மாகாணம் (3) சப்ரகமுவ மாகாணம்

35. பிரித்தானியர் இலங்கையின் கரையோர பிரதேசங்களை மட்டுமன்றி இலங்கை முழுவதையும் கைப்பற்றிய ஆண்டு எது?

(1) 1802 (2) 1815 (3) 1796

36. தேசப்படத்தில் ஊதா நிறம், சிவப்புநிறம், கறுப்புநிறம் என்பவற்றால் குறிக்கப்படுவன முறையே,

(1) புகையிரதப்பாதை,பெருந்தெரு,அதிவேகப்பாதை

(2) அதிவேகப்பாதை, பெருந்தெரு,புகையிரதப்பாதை

(3) அதிவேகப்பாதை, புகையிரதப்பாதை,பெருந்தெரு

37. **"நாங்களெல்லாம் இந்நாட்டின் மக்களன்றோ வாதமில்லை, பேதமில்லை ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்"** எனும் வரிகளின் மூலமாக நாம் விளங்கிக் கொள்வது,

(1) சகல இன மக்களினதும் ஒற்றுமை

(2) இங்கு பல இன மக்கள் வாழ்கின்றனர் என்பதனை

(3) இங்கு பல மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர் என்பதனை

38. சூரிய நமஸ்கார செயற்பாடுகளில் ஈடுபட தெரிவு செய்யப்பட வேண்டிய பொருத்தமான இடம்,

(1) வகுப்பறை (2) பெரிய மரநிழல் (3) சூரியஒளி படக்கூடிய அமைதியான இடம்

39. மகாவலிகங்கை கடலுடன் சங்கமமாகும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நகரம்.

(1) களுத்துறை (2) காலி (3) திருகோணமலை

40. வித்துக்களை நடுகை செய்வதற்கு முன்பு நீரில் ஊற விடுவதற்கான காரணம்,

(1) முளைத்தலை விரைவுபடுத்துவதற்கு.

(2) வித்து முதிர்ச்சியடைவதற்கு.

(3) பூச்சித் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு.

41. உடைந்த கண்ணாடித் துண்டுகள், கடதாசிக் கழிவுகள், இலைகள் என்பவற்றை இடுவதற்குப் பொருத்தமான கழிவு நிறத் தொட்டிகளின் நிறங்கள் முறையே,

(1) சிவப்பு, செம்மஞ்சள், பச்சை (2) சிவப்பு, பச்சை, நீலம் (3) சிவப்பு, நீலம், பச்சை

42. வெளிநாட்டில் வசிக்கும் உமது உறவினர் ஒருவர் கடிதம் ஒன்றை மிகவும் துரிதமாக அனுப்புமாறு கேட்டுக் கொண்டால் நீங்கள் பயன்படுத்தக் கூடிய மிகவும் பொருத்தமான முறை,

(1) விமானத் தபால் (2) கடுகதித் தபால் (3) மின்னஞ்சல்

43. காசுக்கட்டளையொன்றை அனுப்புதல், மாற்றுதல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பான நிறுவனம்,

(1) மக்கள் வங்கி (2) பிரதேச செயலகம் (3) தபாலகம்

44. மகாசேனன், பண்டுகாபயன், தாதுசேனன் ஆகிய மன்னர்கள் அமைத்த குளங்கள் முறையே,

(1) மின்னேரியாகுளம், பசவக்குளம், பராக்கிரமசமுத்திரம்

(2) பசவக்குளம், பராக்கிரமசமுத்திரம், கலாவாவி

(3) மின்னேரியாகுளம், பசவக்குளம், கலாவாவி

Champion Academy

www.lkedu.lk

45. நாம் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை வாங்கும் போது உற்பத்தி திகதியில் இருந்து நீண்ட காலம் காலாவதியாகும் திகதி அமைந்து காணப்படும் பொருள்,

(1) யோகட் (2) தயிர் (3) பால்மாபக்கட்

46. எம்மால் செய்யத்தகக் நேர் வகையான மாற்றங்களுள் ஒன்று,

(1) உணவு உட்கொண்ட பின்னர் பாத்திரங்களை, அவ்விடத்திலே வைத்துவிட்டுச் செல்லல்.

(2) அசுத்தமாக காணப்படும் வகுப்பறையினுள் மேலும் குப்பைகளைக் கொட்டுதல்.

(3) காலையில் நித்திரை விட்டெழுந்தவுடன் படுக்கையை சுத்தம் செய்தல்.

47. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும் போது நிகழ முடியாதது,

(1) நீர் குளிர்ச்சியடையும் (2) ஒலி எழும் (3) நீர் ஆவியாகும்

48. சிரட்டை ஒன்றினால் மூடப்பட்ட புற்றரையின் ஒரு பகுதி படத்தில் காட்டப்பட்டுள்ளது. ஒரு வாரத்தின் பின் சிரட்டையை நீக்கினால் அவதானிக்கக்கூடிய மாற்றம் யாது?

(1) புற்கள் பச்சை நிறமாகக் காணப்படும்.

(2) புற்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும்.

(3) புற்கள் கருகிக் காணப்படும்.




49. மின்குமிழ் ஒன்றை ஒளிரச் செய்வதற்கு அவசியமான இலத்திரனியல் கட்டமைப்பினை பூரணப்படுத்துவதற்கு ஆளியாக பயன்படுத்தக்கூடிய ஒரு பொருள்,

(1) உலோகக் காகிதக் கவ்வி

(2) காட்போட் துண்டு

(3) மூங்கில் துண்டு

50. அருகே தரப்பட்டுள்ள உருவினால் காட்டப்படும் அமைப்பானது,



(1) நீர் சுழலி

(2) நீர் வடிகட்டி

(3) நீர் சக்கரம்

51. அனுராதபுரம், பொலன்னறுவை ஆகியன இலங்கையின்,

(1) வடமாகாணத்தைச் சேர்ந்த நகரங்களாகும்.

(2) வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த நகரங்களாகும்.

(3) வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த நகரங்களாகும்.

52. இலங்கையில் 25 மாவட்டங்களையும் குறிக்கும் வண்ணம் வெளியிடப்பட்ட நாணயம் எது?

(1) ரூபாய் 2.00 (2) ரூபாய் 10.00 (3) ரூபாய் 5.00

53. இலங்கைத் திரு நாடு உலகுக்கு அளித்த பிரதானமான தத்துவஞானி யார்?

(1) ஆதர் சி கிளாக் (2) கலாயோகி ஆனந்குமாரசாமி (3) C.W.W. கன்னங்கரா

54. இந்த தேசப்படத்தில் நிறந்தீட்டப்பட்டுள்ள மாகாணம் மற்றும் அதன் பிரதான தலை நகரத்தை முறையே குறிக்கும் விடை யாது?



(1) ஊவா மாகாணம் - மொணராகலை


(2) வடமத்திய மாகாணம் - அநுராதபுரம்

(3) வடமேல் மாகாணம் - புத்தளம்

Champion Academy

www.lkedu.lk

55. பின்வரும் மின்சுற்றுக்களுள் மின்குமிழ் **ஒளிராத** மின்சுற்று எது?



(1) (2) (3)

56. கைபிடி கொண்ட கோப்பைகளில் சூடான உணவுப் பானங்களை பரிமாறும்போது அந்தக் கோப்பையின் கைபிடியின் பக்கம் அமைய வேண்டிய முறை எது?

(1) பெறுபவரின் இடது பக்கம்

(2) பெறுபவரின் வலது பக்கம்

(3) பெறுபவரின் முன் பக்கம்


57. காலவேறுபாடின்றிப் பூப்பூக்கும் தாவரங்களைக் கொண்ட தொகுதி எது?

(1) தாமரை, வாழை (2) தென்னை, இலுப்பை (3) செவ்வரத்தை, தென்னை

58. தேசப்படமொன்றில் ஊதா நிறத்தில் காட்டப்படும் இப்பாதை 

(1) அதிவேகப்பாதை (2) பெருந்தெரு (3) புகையிரதப்பாதை

59. அருகிலுள்ள பரிசோதனையில் நீர் நிரப்பப்பட்ட **A** பாததிரததில் மெழுகுதிரியை எரியச் செய்து **B** பாத்திரத்தினால் மூடியவுடன் யாது நிகழும்.?



(1) மெழுகுதிரி எரிவதுடன் நீர் குறைவடையும்.

(2) மெழுகுதிரி அணைவதுடன் **A** பாத்திரத்தின் நீர்மட்டம் அதிகரிக்கும்.

(3) மெழுகுதி அணைந்து **B** பாத்திரத்தின் நீர்மட்டம் அதிகரிக்கும்.

60. மனிதனாகப் பிறந்த அனைவரும் தங்கள் வாழ்வினை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தனது வாழ்க்கை இலட்சியம் ஒன்றைக் கொண்டிருப்பர். அந்த வகையில் **"எனது எதிர்கால இலட்சியம்"** என்பதனைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

***

Champion Academy